From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C. .No. 204 /2021

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Prasanna | Father/Husband Name | : Rajaram |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 21.07.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் மேலூர் கருத்தப்புலியம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் ஏ.சி. மெக்கானிக்காக வேலை செய்கிறேன். எதிரிகள் பிரபா என்ற பிரபாகரன் மற்றும் முனியசாமி ஆகியோர்களை சம்பவத்தன்று பார்த்திருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு அடையாளம் தெரியவில்லை. ஒரு வருடத்திற்கு முன்பாக சம்பவத்தன்று மட்டுமே எதிரிகளை நான் பார்த்துள்ளதால் தற்போது எதிரிகளை என்னால் அடையாளம் காணமுடியவில்லை. என்னிடம் காட்டப்படும் 2 ஒப்புதல் வாக்கு மூலங்களிலும் மற்றும 2 அத்தாட்சிகளிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 04.09.21ம் தேதி நான் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்களில் தெற்குப்பட்டி பாலத்தின் அருகே வைத்து சார்பு ஆய்வாளர் அவர்கள் பிரபா மற்றும் முனியசாமி என்பவர்களை விசாரித்துக்கொண்டிருந்தபோது சாட்சி கையொப்பம் செய்தேன். வாக்குமூலம் பதிவு செய்தததை நான் பார்க்கவில்லை, அவர்களை போலீசார் விசாரித்தனர். அவர்கள் போலீசார் கொடுத்த வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. என் முன்னிலையில் எதிரி பிரபா என்பவர் ரூ. 200 மற்றும் ஒரு கத்தியை சார்பு ஆய்வாளரிடம் கொடுத்தார். மற்றொரு எதிரியான முனியசாமி என்பவர் ஸ்பிலண்டர் பிளஸ் இருசக்கர வாகனம் மற்றும் 500 ரூபாயையும் சார்பு ஆய்வாளரிடம் கொடுத்தார். போலீசார் அதை பெற்றுக்கொண்டு தயார் செய்த அத்தாட்சியில் நானும் ராஜ்குமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **(அந்த ஒப்புதல் வாக்குமூலங்களிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் முறையே அ.சா.ஆ.2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அத்தாட்சிகள் முறையே அ.சா.ஆ.4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை

விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை:**

நான் சம்பவத்தை போலீசார் விசரித்தபோது 4 கையொப்பங்கள் செய்தேன். நான்கு கையெழுத்துக்களில் ஒவ்வொரு தாளிலும் முன்பக்கமும், பின்பக்கமும் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். மேலூரிலிருந்து செல்லும்போது தெற்குப்பட்டி பாலம் தான்டியதும் வலதுறத்தில் வைத்து போலீசார் விசாரிக்கும்போது நான் கையெழுத்து செய்தேன். பாலத்தை அடுத்து உள்ள ஜீஸ் கடைக்கும் பாலத்திற்கும் இடையில் வைத்து கையெழுத்து செய்தேன். என்னிடம் கையொப்பம் வாங்கும்போது மேற்படி ஜீஸ் கடைக்காரர் இருந்தாரா என்றால் காலை 9.30 மணி என்பதால் அப்போதுதான் வந்து கடையை திறந்துகொண்டிருந்தார். நான் கூறுகிற இடத்திற்கு எதிர்புறத்தில் அய்யங்கார் பேக்கரி உள்ளத என்றால் எதிரிபுறத்தில் சற்று தள்ளி உள்ளது.

நான் எழுதாத வெற்றுத்தாளில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. எழுதப்பட்டு அதில் என்ன இருக்கிறது என்று எனக்கு கூறியதன் அடிப்படையில் நான் கையெழுத்து செய்தேன். யார் எழுதியது, யார் என்னிட் கையொப்பம் வாங்கியது என்றால் நாங்கள் அந்த பக்கம் நடந்துசென்றுகொண்டிருந்தபோது போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தனர். எங்களை அழைத்து விவரத்தை கூறி எழுதி வைத்திருந்த பேப்பரில் கையொப்பம் கேட்டார்கள். போலீசார் என்ன விசாரித்தார்கள், என்ன வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்று எனக்கு நேரடியாயக தெரியாது என்றால் சரிதான். நான் பொதுப்பிரச்சனை உட்பட அனைத்து பிரச்சனைகளுக்கு அடிக்கடி காவல் நிலைம் செல்வது வழக்கம் என்றாலும், அதன் அடிப்படையில் காவல் நிலையத்தில் உள்ள அதிகாரிகள் எனக்கு நன்கு பரீட்சயம் என்றாலும் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் பிரச்சனை என்றால் காவல் நிலையம் செல்வேன். நான் இதுவரை 2 முறை காவல் நிலையம் சென்றிருப்பேன். அவ்வாறு இரண்டுமுறை காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றபோது பேப்பரில் கையொப்பமிட்டு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு வெளியில் வைத்து போலீசார் எனக்கு சொல்லிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் வழக்கிற்கான பேப்பரை பார்த்து சம்பவம் நடந்து ஒருவருடம் ஆகிவிட்டதால் மீண்டும் நினைவூட்டுவதற்காக விவரங்களை சொன்னார்கள். நான் உண்மையிலேயே போலீஸ் விசாரணையின்போது ஒப்புதல் வாக்கமூலங்கள் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்திருந்தால் தற்போது எதிரிகளை நான் அயைாளம் காட்டியிருப்பேன் என்றாலும், சாட்சியம் அளிப்பதற்கு முன்பு போலீசார் சொல்லிக்கொடுத்த சங்கதிகளை மட்டும் தற்போது எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C. .No. 204/2021

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Rajkumar | Father/Husband Name | : Maluventhi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 21.07.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் மேலூரில் வசித்து வருகிறேன். உடல்நிலை சரியில்லாததால் வீட்டில் ஓய்வில் இருக்கிறேன். அ.சா.3 எனது அண்ணன் மகன். ஆஜர் எதிரிகளை எனக்கு அடையாளம் தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் 2 ஒப்புதல் வாக்கு மூலங்களிலும் மற்றுமு 2 அத்தாட்சிகளிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒருநாள் சார்பு ஆய்வாளர் பாலக்கிருஷ்ணன் என்பவர் மில்கேட் ரோட்டிலுள்ள பாலத்தின் அருகே வைத்து கையெழுத்து வாங்கினார். அன்ற 2 நபர்களை காண்பித்து அவர்களில் ஒருவரிடம் இருசக்கர வாகனம் மற்றும் 500 ரூபாயை வாங்கியும் மற்றொரு நபரிடம் ரூ.200ஐ வாங்கியதற்காகவும் சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நானும் அ.சா.3ம் கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தனர். **(ஒப்புதல் வாக்குமூலங்களிலுள்ள 2-வது கையெழுத்துகள் அ.சா.ஆ.6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**குறுக்கு விசாரணை:**

நானும் அ.சா.3ம் இடம் பார்ப்பது சம்மந்தமாக மில்கேட் ரோட்டில் போய்விட்டு வந்துகொண்டிருந்தபோது போலீசார் 2 நபர்களை காண்பித்து கையெழுத்து வாங்கினார்கள், ஆஜர் எதிரிகள் இருந்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. நான் அவ்வாறு கையொப்பம் செய்ததாக சொல்லப்படும்போது அந்த 2 நபர்கள் என்ன வாக்குமூலம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும்போது போலீசார் ஒரு தாளில் எழுதி வைத்திருந்ததை என்னிடம் காண்பித்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என் முன்னிலையில் ஒருவரிடமிருந்து ரூ. 500 பணமும், இருசக்கர

வாகனமும் போலீசார் வாங்கினார்கள். மற்றவரிடமிருந் கத்தியை வாங்கியதாக கூறினார்கள். நான் உண்மையிலேயே போலீஸ் விசாரணையின்போது ஒப்புதல் வாக்க மூலங்கள் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்திருந்தாலும் என் முன்னிலையில் எதிரிகளிடமிருந்து பொருட்களை கைப்பற்றியிருந்தாலும், தற்போது எதிரிகளை நான் அயைாளம் காட்டியிருப்பேன் என்றாலும், சாட்சியம் அளிப்பதற்கு முன்பு போலீசார் சொல்லிக்கொடுத்த சங்கதிகளை மட்டும் தற்போது எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.